# 24

# நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உத்தமத் தோழர்கள்

நபி ஸல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தமது வாழ்நாளில் நேரடியாகக் கண்ட முஸ்லிம்கள் ஸஹாபாக்கள் எனப்படுகின்றனர். இவர்கள் நபி ஸல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் நெருங்கியிருந்து இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக தமது உயிர், உடல், பொருள், சக்தி, நேரம், அறிவு, சுகம் போன்ற அனைத்தையும் அர்ப்பணித்தவர்களாவர். இதனால் தான் அல்லாஹ் அவர்கள் அனைவரையும் பொருந்திக் கொண்டான். இது பற்றி அல்லாஹ் அல்குர்ஆனிலும் பிரஸ்தாபித்திருக்கிறான்.

*‘அல்லாஹ்வும் அவர்களைப் பொருந்திக் கொண்டான். அவர்களும் அல்லாஹ்வைப் பொருந்திக்கொண்டார்கள்’ (98:8)*

ஆகவேதான் ஸஹாபாக்களின் பெயர்கள் உச்சரிக்கப்படும் பொழுது ‘ரழியல்லாஹு அன்ஹு’ என்று நாம் கூறுகின்றோம். இதன் பொருள் ‘அல்லாஹ் அவர்களைப் பொருந்திக்கொண்டான்’ என்பதாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் ‘காலங்களில் சிறந்தது நானும் எனது ஸஹாபாக்களும் வாழ்ந்த காலமாகும்’ எனக் குறிப்பிட்டுப் பாராட்டியுள்ளார்கள். இந்த ஹதீஸ் ஸஹாபாக்களின் சிறப்புக்குத் தக்க சான்றாகும். இனி சில ஸஹாபாக்களைப் பற்றி சுருக்கமாக அறிந்து கொள்வோம்.

## ஸைத் பின் ஸாபித் ரழியல்லாஹு அன்ஹு

மதீனாவில் பத்றுப் போருக்காக அழைப்பு விடுக்கப்பட்டது. ஒரு சிறு வன் தனது வாளை இடுப்பில் செருகியவாறு வந்து கொண்டிருந்தான். வாள் நிலத்தில் உராய்ந்து கொண்டிருந்தது. சிறுவர்கள் போர் செய்ய அனுமதிக்கப்

படமாட்டார்கள் என அறிவிக்கப்பட்டதும் ஏமாற்றமடைந்த அச்சிறுவன், தாயிடம் மீண்டான். அவனது கவலையை அவதானித்த தாய் குர்ஆன் ஸூராக் களைப் பாடமிட்டு நபி (ஸல்) அவர்களிடம் ஒப்புவிக்குமாறு கூறினார். போரிலிருந்து மீண்டபோது அச்சிறுவன் தான் மனனமிட்டதை நபியவர் களிடம் ஒப்புவித்தார். அப்போது நபியவர்கள் அவரை கைதி ஒருவரிடம் அனுப்பி எழுத, வாசிக்கக் கற்றுக் கொள்ளுமாறு வேண்டினார்கள். குறுகிய காலத்தில் கற்றுக்கொண்ட அச்சிறுவன் பிற்காலத்தில் நபியவர்களின் வேண்டு கோளுக்கிணங்க அபரானி, சுர்யானி மொழிகளையும் கற்றுக் கொண்டார்.

இச்சிறுவனே பிற்காலத்தில் இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு அரும் பணி யாற்றிய ஸைத் பின் ஸாபித் ரழியல்லாஹு அன்ஹு அவர்களாவர். இவர் நபியவர்களோடு நெருக்கமாக வாழ்ந்த முக்கியமான ஸஹாபாக்களில் ஒருவராவார். அன்று அரபு நாட்டில் இருந்த எழுத வாசிக்கத் தெரிந்தவர்களில் இவரும் ஒருவர். அல்குர்ஆனை மிகவும் திறம்பட ஓதக் கூடியவரான இவர் மிகச் சிறந்த அறிஞருமாவார்.

அல்குர்ஆனைக் கற்பதிலும் அதனை மனனம் செய்வதிலும், பிரதி யெடுத்துப் பாதுகாப்பதிலும் பெரும் பங்கு வகித்தவர். நபியவர்களின் காலத்தில் ரமழானில் ஜிப்ரீல் (அலை) குர்ஆனை ஓதிக் காண்பித்தபோது அதனை உடனிருந்து செவிமடுத்தவர். அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் அல்குர்ஆனை ஒன்று சேர்த்து நூலுருப்படுத்திய இவர், உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் திருக்குர்ஆனைப் பிரதி யெடுப்பதிலும் பங்களிப்பு செய்துள்ளார்.

## ஸல்மானுல் பாரிஸி ரழியல்லாஹு அன்ஹு

ஸல்மானுல் பாரிஸி (ரழி) அவர்களும் ஸஹாபாக்களில் மிக முக்கியமான ஒருவர். ஸல்மான் என்ற பெயரையுடைய இவர் பாரசீக நாட்டைச் சேர்ந்தவர். இதனால் ஸல்மானுல் பாரிஸி என்று அழைக்கப்பட்டார். இவர் நெருப்பை வணங்கும் மஜூஸி குடும்பத்தில் பிறந்த ஒருவராவார்.

நெருப்பை வணங்கும் மார்க்கத்தில் உண்மையில்லை என்பதை இளமை யிலேயே ஸல்மான் அவர்கள் உணர்ந்திருந்தார்கள். இதனால் உண்மையான மார்க்கத்தை அறிந்துகொள்ள ஆவல் கொண்டார்கள். முதலில் கிறிஸ்தவ சமயத்தைப் பற்றி அறிந்துகொள்ள சிரியாவுக்குச் சென்றார்கள். அங்கு ஒரு கிறிஸ்தவ மதபோதகர் மூலம் அரேபியாவில் நபியொருவர் அனுப்பப்படுவார் என்ற செய்தியையும் அவரது குணப்பண்புளையும் அறிந்து கொண்டார்கள். இதனால் அவரைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவல் அவரில் மேலிட்டது.

பின்னர் சிரியாவிலிருந்து ஒரு வியாபாரக் குழுவுடன் அரேபியாவுக்குச் சென்றார்கள். செல்லும் வழியில் அந்த வியாபாரக் குழுவினர் அவர்ரை ஒரு யூதனுக்கு அடிமையாக விற்று விட்டனர். சில நாட்களுக்குப் பின்னர் அந்த யூதனின் சிறிய தந்தையின் மகன் அவரை விலைக்கு வாங்கி மதீனாவுக்கு அழைத்துச் சென்றான். மதீனாவில் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இருப்பதை அறிந்து, அவர்களைக் காண ஆர்வம் கொண்டார்கள். நபியவர்களைச் சந்தித்தபோது நுபுவ்வத்தின் அடையாளங்களை அவர்களில் கண்டுகொண்டார்கள். இவர்கள்தான் அல்லாஹ்வின் இறுதித்தூதர் என்பதை உறுதியாக அறிந்துகொண்டார்கள். அதன் பின் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கரத்தை பற்றிப் பிடித்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். நபி (ஸல்) அவர்கள் அந்த யூதனுக்கு உரிய தொகையைக் கொடுத்து அவர்களை விடுதலை செய்தார்கள்.

இவர்கள் மிகவும் எளிமையாகவே வாழ்ந்தார்கள். எளிமையையே விரும்பினார்கள். தமக்கென ஒரு குடிசையைக் கூட வைத்திருக்கவில்லை. தன் கைகளினாலேயே சம்பாதித்து உண்பார்கள். அவற்றிலிருந்து ஒரு பங்கை தர்மம் செய்பவராகவும் இருந்தார்கள். பிற்காலத்தில் 'மதாயின்' பகுதியின் தலைவராக நியமிக்கப்பட்டபோதும் தமது எளிமையைக் கைவிடவில்லை. இவர்கள் இஸ்லாத்துக்காக பல்வேறு பணிகளைச் செய்துள்ளார்கள். அகழி யுத்தத்தின்போது இவரது ஆலோசனைப் படியே அகழி தோண்டப்பட்டது. இவர் நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்கள் பலவற்றைக் கற்று அவற்றை அறிவிப்புச் செய்துள்ளார்கள். இவ்வாறு இஸ்லாத்துக்காக அரும் பணியாற்றிய ஸல்மானுல் பாரிஸி (ரழி) அவர்கள் ஹிஜ்ரி 35 ஆம் ஆண்டு மதாயினில் வபாத்தானார்கள்.

**பயிற்சி**

1. ஸஹாபாக்கள் என்போர் யாவர்?
2. நபியவர்களால் சிறந்த காலம் என குறிப்பிடப்பட்ட காலப்பகுதி எது?
3. ஸைத் பின் ஸாபித் (ரழி) அவர்கள் கற்றுக்கொண்ட மொழிகள் இரண்டும் எவை?
4. ஸைத் பின் ஸாபித் (ரழி) அவர்களின் பணிகள் இரண்டைக் குறிப்பிடுக.
5. ஸல்மானுல் பாரிஸி (ரழி) அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
6. ஸஸ்மானுல் பாரிஸி (ரழி) அவர்களின் குணப்பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.